# அங்குனுகொலபெலஸ்ஸ பிரதோச சபை
# ஹம்பாந்தோட்டை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்பித்திருந்ததுடன், அந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஜுலை 23 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து அங்குனுகொலபெலஸ்ஸ பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(அ) மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்படாத 04 நிர்மாண வேலைகளுக்காக ரூபா 580,000 இற்கான கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளபட்ட காரணத்தினால் மூலதனச் செலவுகள் மற்றும் கடன் கொடுத்தோர் அதே பெறுமதியினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2009 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 283,500 தொகை பெறுமதியான குப்பை கொண்டு செல்லும் டேலர் மற்றும் மீளாய்வண்டின் போது நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 204,640 தொகைக்கான கணிணிகளின் பெறுமதியினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது நீதிமன்ற தண்டபண வருமானம் மற்றும் வருட இறுதியில் உள்ளவாறு நீதி மன்ற தண்டபணம் வருமானம் ரூபா 105,618 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) கடந்த ஆண்டின் போது கொள்வனவு செய்து கணக்கீடு செய்திருந்த ரூபா 63,710 தொகைக்கான நூலக புத்தகங்களின் பெறுமதி மீளாய்வாண்டின் போது மீண்டு கணக்கீடு செய்திருந்தமையால் புத்தக இருப்பின் பெறுமதி இரட்டைப்படுத்தப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த 2000 லீட்டர் 5 நீர் தொட்டிகளின் பெறுமதியின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக் கூற்றுக்களிலுள்ள 06 கணக்கு விடயங்களின் மீதிகள் அதனோடு தொடர்புடைய புத்தகங்கள் மற்றும் அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 2,112,552 இற்கான சமமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

(i) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 1,523,158 தொகைக்கான மோடர் கிரேடர் நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்காக மற்றும் ரூபா 1,081,509 தொகைக்கான 39 தீர்க்கப்படாத முற்பண பதிகள் மற்றும் தீர்க்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள் என நிதி கூற்றுகளில் பல வருட காலமாக முன் கொண்டு வந்து காணப்படும் ரூபா 10,240 இற்கான மீதியை தீர்ப்பதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) பல்வேறு மூலதன நிகழ்ச்சி திட்டங்கள் செய்யபடுத்துவதன் மூலம் மீளாய்வாண்டு இறுதி அளவில் அறவிடப்பட வேண்டியிருந்த மூலதன உதவி மீதி ரூபா 17,769,483 தொகையாக இருந்ததுடன், அவற்றில் ரூபா 504,898 தொகை 2016 ஆம் ஆண்டிற்கு உரியதாகும்.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்ககுகள்**

(i) 2013 ஆண்டு முதல் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 516.079 இற்கு தேசத்தை கட்டியெழுப்பும் வரி மற்றும் காணிப்பதிவாளர் அலுவலகத்திற்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 35,208 இற்கான தொகை மீளாய்வாண்டு இறுதி அளவிலும் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பலவின கடன் கொடுத்தோர் மீதி ரூபா 19,965,127 தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 1,070,139 தொகை கடந்த ஆண்டை சேர்ந்ததாகும்.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையினால் கூட்டுத்தொகை ரூபா 122,081,612 தொகைக்கான 08 கணக்கு விடயங்கள் ரூபா 1,692,250 தொகைக்கான ஒரு கணக்கு விடயத்தை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்பங்கள் கீழே காணப்படுகின்றன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங் களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |

| | | | |
|---|---|---|---|
| | (i) | விதி 193 | பாதீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகள் மற்றும் குறை நிரப்புக்கள் அங்கீகாரத்துடன் இணக்கஞ் செய்து ஒவ்வொரு வருமான விடயங்கள் மற்றும் செலவு விடயங்களின் கீழ் காணப்படும் மிகை அல்லது பற்றாக்குறை தொடர்பாக விடயங்களின் கூற்றொன்று சமர்பித்திருக்கவில்லை. |
| | (ii) | விதி 217 | சபைக்கு உரித்தாக்கப்படாத சபையினால் பயன்படுத்தபடும் அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பான தகவல்கள் அடங்கும் வகையில் பீ.எஸ் 46 படிவத்தின் பிரகாரம் பதிவேடு நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | |
| | (i) | நிதிப் பிரமாணம் 110 | நட்டங்கள் சேதங்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) | நிதிப் பிரமாணம் 371 (5) | வழங்கப்படும் முற்பணம் குறிப்பிட்ட கருமம் முடிவடைந்த உடன் தீர்கப்பட வேண்டுமெனினும், சபையினால் 40 சந்தர்பங்களை வழங்கியிருந்த ரூபா 871,261 இற்கான முற்பணம் 2018 ஜனவரி 24 திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) | நிதிப் பிரமாணம் 396 (ஈ) | கொடுப்பனவுக்காக சமர்பிக்கபடாத 06 மாத காலத்தை மிகைத்திருந்த கூட்டுத்தொகை ரூபா 108,984 தொகைக்கான 26 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (iv) | நிதிப் பிரமாணம் 571 | வைப்பு செய்த நாளில் இருந்து இரண்டு வருடங்களை மிகைத்துள்ள ரூபா 1,570,517 தொகைக்கான 205 பலவின வைப்பு மீதிகள் மற்றும் ரூபா 132,349 தொகைக்கான 14 தடுத்து வைத்தல் வைப்பு தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) | 2010 ஆகஸ்ட் 17 ஆம் திகதி பீஈ/01/01 ஆம் இலக்க மின் சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சின் சுற்றறிக்கை. | | மீளாய்வாண்டின் போது சபையினால் 2070 வீதி விளக்கு பராமரிக்கபட்டிருந்ததுடன், அது தொடர்பாக மின்சார சபைக்கு விண்ணப்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்காமையால் 350 வீதி விளக்குகளின் கட்டணம் மாத்திரம் கட்டண மீளளிப்பு செய்யப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2014 பெப்ரவரி 24 திகதி 01/2014 ஆம் இலக்க தென்மாகாண பிரதான செயலளரின் சுற்றறிக்கை. | | சபை ஊழியர்களிடம் பிணைப் பணம் பெற்றிருக்கவில்லை. |

### 1.3.6 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தபடாத கொடுக்கல் வாங்கல்கள்

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் 04 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 19,571,000 இற்கான ஏற்பாடுகளை மிகைத்து ரூபா ரூபா 7,384,470 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அவ்வாறு மிகையாக மேற்கொள்ளபட்ட செலவுகளை தீர்ப்பதற்காக 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 14(1) மற்றும் 14 (2) இன் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 2,703,288 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,331,307 தொகை ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரியும் வரியும் | 310,000 | 362,595 | 283,645 | 262,361 | 270,000 | 365,230 | 279,405 | 229,861 |
| (ii) வாடகை | 12,063,500 | 13,180,863 | 11,946,674 | 1,563,323 | 12,166,000 | 11,896,325 | 11,347,979 | 845,906 |
| (iii) அனுமதிப்பத் திர கட்டணம் | 1,021,500 | 809,104 | 796,604 | 97,965 | 1,080,400 | 928,786 | 928,786 | 89,940 |
| (iv) ஏனைய வரு மானங்கள் | 3,566,800 | 3,903,933 | 1,403,307 | 3,975,566 | 2,514,600 | 3,454,636 | 692,226 | 3,680,820 |
| மொத்தம் | 16,961,800 | 18,256,495 | 14,430,230 | 5,899,215 | 16,031,000 | 16,644,977 | 13,248,396 | 4,846,527 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டின் போது சிட்டையிடப்பட்ட மொத்த வருமானம் ரூபா 18,256,495 தொகையாக காணப்பட்டதுடன் அவற்றில் ஆண்டின் போது ரூபா 14,430,230 தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. கடந்த வருட இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 4,846,527 இற்கான நிலுவை வருமான மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 5,899,215 தொகை வரை அதிகரித்திருந்தது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134 பிரிவுக்கு இணங்க வீதவரி விதிக்கப்பட்டு அறவீடு செய்வதற்காக 2018 ஜனவரி 31 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.4 வாடகை

தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 27 ஆம் திகதி மற்றும் தபபா/பபாகொ/2010/01 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் 6 ஆம் பந்திக்கு இணங்க கடைகளை ஐந்து வருடத்திற்கு ஒருமுறையேனும் பெறுமதி மதிப்பீடு செய்து வாடகையை திருத்த வேண்டும் எனினும், அங்குனுகொல பெலஸ்ஸவில் அமைந்துள்ள 10 கடைகளின் பெறுமதியினை மதிப்பீடு செய்திருக்காததுடன், தெபொக்காவவில் நான்கு கடைகளை இறுதியாக 2007 ஆம் ஆண்டு பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.5 அனுமதிப் பத்திர கட்டணம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) 1987 .ன் 15 ஆம் இலக்க பிரதேச சபைக்கு சட்டத்தில் 152(2) பிரிவின் பிரகாரம் பல்வேறு திறந்த தொழில்கள் தொடர்பாக அனுமதி பத்திர கட்டணம் விதிக்கப்பட்டு அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனினும் சபையின் அதிகார பிரதேசத்தில் செயற்படும் சட்டவறிஞர், மருத்துவ மற்றும் பதிவாளர் போன்ற தொழில்களின் மூலம் அனுமதிப் பத்திர கட்டண அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவுகள் 149,150 மற்றும் 152 இன் பிரகாரம் அனுமதிப்பத்திர கட்டணம் அறவிடப்படாமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 84,225 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(இ) 2000 இன் 53 ஆம் இலக்கம் மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்கம் ஆகிய சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சார் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்களுக்கு இணங்க சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாமல் வியாபார நடவடிக்கைகள் நடாத்தப்பட்டிருந்தது.

(ஈ) சபையின் அதிகார பிரதேசத்தின் நடாத்தப்படுகின்ற சில வியாபர நிலையங்களின் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திர பெற்றிருந்த போதிலும் வியாபார அனுமதி பத்திர பெறுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.6 வியாபார வரி

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய வியாபர வரி பெறுமதி ரூபா 238,385 தொகை ஆக காணப்பட்டதுடன், அந்த நிலுவைத் தொகை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 152 (4) இன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

தென்மாகாண சபையிலிருந்து மற்றும் ஏனைய அதிகாரியிடம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 3,191,424 தொகை மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 1,097,113 தொகை பெற வேண்டி காணப்படுகின்றது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

1987 இன் 15 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதாரம், பொதுபயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பெருந்தெருக்கல் தொடர்பாக விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொது மக்களின் சுகபோக வாழ்வு, வசதி மற்றும் நலனோம்பு என்பன சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) செயற்படுத்தப்படாத செய்பணிகள்

வருடாந்த பாதீட்டில் சபை நிதியத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது செயற்படுத்துவதற்கு நிதி ஏற்பாடுகள் செய்திருந்த 04 மூலதன நிகழ்ச்சி திட்டங்கள் செயற்படுத்தியிருக்கவில்லை.

#### (ஆ) செய்பணிகள் நிறைவேற்றுவதில் தாமதம்

திட்டமிடப்பட்டுள்ள தகனசாலை கட்டிடத்தின் நிர்மாண வேலைகளுக்காக 2017 திசெம்பர் 31 திகதி அளவில் ரூபா 10,280,986 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அதன் வேலை பூர்த்தி செய்திருக்கவில்லை.

#### (இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரல் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகலாவிய சுட்டிகளின் ஊடாக அதிகார பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தின் மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

#### மீளளிப்பு செய்யபட்டிருக்காத தேர்தல்கள் கொடுப்பனவுகள்

2011 ஆண்டு உள்ளுராட்சி தேர்தல் கடமைகள் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளரிடம் மீளளிப்பு செய்யப்பட வேண்டிய ரூபா 47,555 இற்கான தொகை 2018 ஜனவரி 24 திகதி அளவிலும் மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

சபையின் அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவியணியை சேர்ந்த 08 பதவிகளில் 09 பேர் வெற்றிடமாகவும் அதனை நிரப்புவதற்காக மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்**

(அ) சபையினால் பயன்படுத்தபடும் ரூபா 9,831,130 தொகைக்காக 34 காணிகள் ரூபா 7,074,583 கிரயத்திற்கான 26 கட்டிடங்கள் என்பனவற்றின் சட்டரீதியான உரிமையை சபைக்கு உரித்தாக்குவதற்கு 2018 ஜனவரி 24 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2016 ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த பண்டக் கணிப்பீட்டின் பிரகாரம் 42 காணிகள் புதிதாக இணங்காணப்பட்டிருந்ததுடன் 2018 ஜனவரி 24 திகதி வரையும் அந்த காணிகளை சபைக்கு உரித்தாக்குவதற்காக மற்றும் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.4 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இடை சொருகல் துண்டுக்கற்கள் தயாரிக்கும் இயந்திரம் 2016 ஆண்டு முதல் துண்டுக்கற்கள் தயாரிப்பதற்கு பயன்படுத்துவதற்கு அல்லது வெளி தரப்பினருக்கு வழங்கி வருமானம் ஒன்றினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபைக்கு சொந்தமான முச்சக்கர வண்டி ஒன்று 2016 ஆண்டு முதல் ஓட்டப்படாமல் சபையின் வாகன தரிப்பிடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(இ) மக்கள் வங்கியில் பேணப்படும் சேமிப்பு கணக்கு ஒன்றில் ரூபா 274,306 தொகைக்கான மீதியொன்று 2015 ஆண்டு முதல் செயற்படாமல் காணப்பட்டது.

**3.4.3 வருடாந்த பண்டக் கணிப்பீடு**

2016 ஆண்டின் பண்டக் கணிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள மூன்று விதப்புரைகளை 2018 ஜனவரி 24 ஆம் திகதி அளவிலும் செயற்படுத்தியிருக்கவில்லை.

**3.4.4 வாகனப் பயன்பாடு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) ரூபா 7,219,000 கிரயத்தை உடைய 4 வாகனங்களின் சட்டரீதியான உரிமை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபைக்கு சொந்தமான 11 வாகனங்களுக்காக மீளாய்வாண்டிற்கான வருமான அனுமதிப் பத்திரம் பெற்றிருக்கவில்லை.

(இ) 2016 திசெம்பர் 29 ஆம் திகதி 30/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை

மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும் 2018 ஜனவரி 24 திகதி அளவில் சபைக்கு சொந்தமான 09 வாகனங்களின் எரிபெருள் எரிதல் பரிசோதனை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது கப் வண்டி ஒன்று ரூபா 533,471 இற்கான எரிபொருள் பயன்படுத்தப்பட்டு 49,930 கிலோ மீற்றர் தூர ஓடியிருந்த போதிலும் ஓட்ட அட்டவணைகள் எழுதும் போது கடமை சரியாக குறிப்பிட்டிருக்காத மற்றும் நேரங்கள் குறிப்பிடப்படாத அனேக சந்தர்பங்கள் காணப்பட்டதுடன் வழமையல்லாத தூர அளவு ஒன்றினை குறிப்பிட்டு கப் வண்டியின் ஓட்ட அட்டவணைகள் எழுதியிருந்த சந்தர்பங்களும் காணப்பட்டன.

## 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தென்மாகாண அபிவிருத்தி திட்டம் - 2017 இன் கீழ் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்திற்கு நீர் வழங்கும் செயற்திட்டத்திற்காக குழாய் கிணறு ஒன்று நிர்மாணிப்பதற்காக தேசிய நீர் வழங்கள் மற்றும் வடிகால் அமைப்புச் சபையிலிருந்து ரூபா 606,855 இற்கான மதிப்பீடு ஒன்று பெற்றிருந்ததுடன், திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலைய வளவில் குழாய் கிணறு ஒன்று நிர்மாணிப்பற்கு ஏற்ற அளவு நிலக் கீழ் நீர் காணப்படாமையால் அங்குனுகொலபெலஸ்ஸ நகர மண்டப வளவில் கிணறு நிர்மானிக்கப்பட்டது. முறையான சாத்தியக் கூறு அறிக்கை ஒன்று இன்றி செயற்திட்ட பிரேரனைகள் தயாரிக்கப்படுவதனால் நகரசபை வளவில் இருந்து 3 கிலோ மீற்றர் தூரத்தில் காணப்படும் யகாகல பிரதேசத்தில் அமைந்துள்ள திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்திற்கு நீர் வழங்கும் போது மேலும் மேலதிக கிரயம் ஒன்று மேற்கொள்வற்கு நேரிடும் என அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகள் இடையே கீழ் விவரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப் பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுபாடு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) 24 செலவு விடயங்களுக்காக பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 19,297,500 இற்கான மொத்த ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 04 செலவு விடயங்களுக்காக ஒதுக்கியிருந்த ஏற்பாடுகளில் ரூபா 7,601,420 இற்கான சேமிப்புக்கள் அவதானிக்கப்பட்டதுடன், அவை 08 சதவீதம் முதல் 59 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

(இ) 03 வருமான விடயங்களில் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 9,990,784 தொகை காணப்பட்டதுடன் அப்பெறுமதிகள் 20 சதவீதம் முதல் 30 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது.

## 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

2009 ஜுன் 09 திகதிய DMA/2009(i) ஆம் இலக்கம் கொண்ட முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதியாண்டு இறுதியளவில் குறைந்தது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 04 நடாத்தப்பட வேண்டுமெனினும் சபையினால் மீளாய்வாண்டின் போது 02 குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுபாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமை | | குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | கணக்கு மீதிகள் கைவிடல் உட்பட பெறுமதி குறைவாக மற்றும் மிகையாக கணக்கீடு செய்திருந்த சந்தர்பங்கள் காணப்பட்டன. |
| | | (ii) | நிதிக் கூற்றுக்களில் காட்டபட்டுள்ள பெறுமதிகள் மற்றும் துணை பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள பெறுமதிகளிடையே வித்தியாசங்கள் காணப்பட்டன. |
| (ஆ) | வருமான நிருவாகம் | (i) | வீதவரி பெறுமதி மதிப்பீடு செய்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை. |
| | | (ii) | புதிய வருமானத்தை உருவாக்கும் வழிகளை இனங்காண்பது தொடர்பாக கவனம் செலுத்தி யிருக்காமை. |
| | | (iii) | நிலுவை மோட்டார் கிரேடர் வருமானத்தை அறவீடு செய்திருக்காமை. |
| (இ) | வருமான நிருவாகம் | (i) | பண்டக் கணிப்பீட்டு அறிக்கைளில் குறிப்பிட்டுள்ள விதப்புரைகளை செயற்படுத்தி இருக்காமை. |
| | | (ii) | திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்தக் கூடிய வாகனங்களை பழுதுபார்த்திருக்காமை. |
| | | (iii) | வாகனங்களின் உரிமையினை உரித்தாக்கியிருக்காமை. |
| (ஈ) | பாதீட்டு கட்டுபாடு | (i) | முறையான ஆய்வு மற்றும் மதிப்பாய்வு ஒன்றுடன் மதிப்பீடுகள் தயாரித்திருக்காமை. |
| | | (ii) | பாதீட்டு மற்றும் உள்ளவாறான நிலைமைகளை ஒப்பீடு செய்து பாதீட்டை திருத்தியிருக்கவில்லை. |